கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து போட்டுக் கட்டிக்கொள்ளலாம் என்று கேட்டால் அவர்களுக்கு அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே அப்படிச் செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டால், அதற்கு அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு திட்டங்களையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறார்கள். 940 ரூபாய் கொடுப்பது என்பது மாநிலத்தின் திட்டம் ஆகும். அதில் எல்லா அரிசனங்களுக்கும் வீடுகள் கட்டித் தருகிறோம். அதிலே 750 ரூபாய் மானியமாகத் தருகிறோம். மீதியை கடனாகப் பெற்றுக்கொள்கிறார்கள். 940 ரூபாய்க்கு மேற்கொண்டு அவர்கள் போட்டு கட்டிக்கொள்ள வேண்டுமென்றால், அப்படிக் கட்டிக் கொள்ளலாம், அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்றால், நில ஆர்ஜிதம் செய்வதற்கு பணம் போதுமான அளவில் இல்லாததால் நில ஆர்ஜிதம் செய்வது நிறுத்திவைக்கப்படவேண்டுமென்று அதிகாரிகளுக்கு ஆணையிடப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நில ஆர்ஜிதம் செய்வது கொஞ்ச காலம் நிறுத்தி வைக்கப்பட்டதுதான். 83 ஆயிரம் மனைகள் வரை அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்காமல் இருந்தன. அந்த நிலைமையில் மேலும் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக அர்ஜன்ஸி கிளாஸைப் பயன்படுத்தி கையகப்படுத்தி எங்கள் நிலங்களை எடுக்கிறார்கள், அவசரத்தை முன்னிட்டு எடுத்தாலும் வீடுகள் கட்டிக் கொடுக்காமல் ஆண்டுக் கணக்கிலே அப்படியே போட்டுவிடுகிறார்கள். எனவே அதன்மூலம் எடுக்க வேண்டாமென்று கேட்டார்கள். ஆகவே எடுத்திருக்கிற மனைகளில் வீடுகளை முதலில் கட்டிக்கொடுத்துவிடவேண்டும் என்ற முறையிலேதான் இடைக் காலத்திலே நில ஆர்ஜிதம் நிறுத்திவைக்கப்பட்டது, ஆனால் இப்பொழுது தொடர்ந்து செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. வீடுகளை விரைவிலே அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கின்ற வகையிலே கடந்த ஆண்டிலே மேலும் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே கடைசிவரையிலும் அதைநிறுத்தி வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Landholdings

* 12 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Director of Tenancy Records has recommended any probe into landholdings recently in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) சிறிய உழவர்களின் பொருளாதார நிலைமைகள், சிறு நிலவுடமைகள் குறித்த பிரச்சினைகள், குத்தகையுரிமைகள் பதிவுச்சட்டத்தைச் செயல்

படுத்துவதில் உள்ள இடையூறுகள் ஆகியவைபற்றிய பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கருத்துரைகள் முற்றிலும் ஏட்டளவே ஆகும்; அறிக்கையிலிருந்து உருவான பலன் ஏதும் விளையாது எனலாம்.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே என்னுடைய பகுதியில் இனும் கிராமங்கள் சர்வே செய்யப் படாமல் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்களிலே புஞ்சைச் சாகுபடி செய்யப்படுகிறது. அந்த நிலங்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைக்கவேண்டு மென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் அந்த நிலங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால் இனும்தாரர்களுடைய அனுபவத்தில் இருப்பதாக அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்திருப்பதால், அவற்றை பஞ்சாயத்திலே ஒப்படைப்பதற்கும் விவசாயிகள் பயனடைவ தற்கும் அது தடையாகலாம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எனவே அப்படித் தடைகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இனும் நோடிபிகேஷன் செய்தபிறகு அங்கே சர்வே வேலைகள் நிச்சயமாக நடைபெறும். அதன்பிறகு இவை நடக்கும்.

Tax on gases

* 13 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether gas for use of catering is being taxed at source; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) புர்சேன், கால்கேஸ், இன்டேன் போன்ற எரி பொருள் வாயுக் களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை நிலையில் 7 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது.

THIRU N. DENNIS : As it is an essential domestic article, may I know from the Hon. Minister whether tax would be collected in such a way as to save the purchasers from tax burden?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே பலமுனை வரியாக இருந்தது, இந்த மாமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது.

நந்தியாலத்தில் மனு நீதித் திட்டம்

* 14 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு, வாலாஜா வட்டம், நந்தியாலம் கிராமத்தில் 1969-70-ல் மனு நீதித்திட்டம் நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை மனுக்கள் இன்று வரை பரிசீலனை செய்யப்பட்டுள்ளன?